திரு. செல்வராஜ் என்கிற கவிதைப் பித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது குளத்தூர் தொகுதி ரிசர்வ் தொகுதி. ஆதிதிராவிடர்களுக்குக் கட்டப்படும் தொகுப்பு வீடுகள் மூலமாகப் பயன்பெற்றவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டை மாவட்டத்திலேயே கடந்த ஆட்சிக் காலத்தில், என்னுடைய தொகுதியில் மிகக் குறைவாகப் பயன்பெற்றிருக்கிறார்கள். அதை அரசு கவனத்தில் கொண்டு, இந்த ஆண்டிலாவது எங்களுடைய தொகுதிக்கு, ஆதிதிராவிடர்களுக்குக் கட்டப்படும் தொகுப்பு வீடுகளை அதிகமாக ஒதுக்கித்தர, முன்னுரிமை வழங்க, இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையது அல்ல. நீங்கள் தனிக் கேள்விப் போடலாம்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் தேவையின் அடிப்படையில் தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி தனித் தொகுதி என்று சொல்லி இருந்தார்கள். அதற்குத் தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 201, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

201—

நவ திருப்பதி திருத்தலங்களைச் சுற்றுலா மையமாக்குதல்

***1299–திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவைகுண்டம் நவ திருப்பதி திருத்தலங்களைச் சுற்றுலா மையமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 21]

(அ) மற்றும் (ஆ) : அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேவிட் செல்வின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவதிருப்பதி ஸ்தலங்கள் அனைத்துமே சிதம்பரனார் மாவட்டத்தில்தான் உள்ளது. அவை முந்தைய ஆட்சியாளர்களால் கவனிப்பாரற்ற நிலையில் இருந்தன. நமது அரசு பழுதுபட்ட நிலையில் உள்ள கோயில்களை எல்லாம் செப்பனிட்டு, சரியான சாலை வசதியினைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தென்னகத்திலிருந்து நாட்டின் சுதந்திரத்திற்காக முதன் முதலாகக் குரல் கொடுத்த பாஞ்சை வேந்தன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் கோட்டை கட்டிச் சிறப்புச் செய்தார்கள். ஆனால் முந்தைய அரசாங்கம், வக்கிர மனத்தோடு நுழைவாயிலில் இருந்த தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரை அகற்றிவிட்டது. கட்டபொம்மனின் வாரிசுகளின் கடுமையான எதிர்ப்பையும் மீறி அவர்கள் அப்படிச் செய்தார்கள். மீண்டும் தலைவர் கலைஞர் அவர்களின் பெயர் பொறிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

திரு. அ.லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நவதிருப்பதி என்பது 9 ஆழ்வார்களுடைய கோயில்களாகும். ஆழ்வார்களால் பாடப்பட்ட திருவைகுண்டம், ஆழ்வார் திருநகரி போன்ற பகுதிகள் அழகான சிற்பங்கள், மிகவும் வேலைப்பாடமைந்த சிற்பங்கள் இருக்கின்ற இடம். இந்த 9 ஊர்களுமே அப்படித்தான். ஆகவே இதைச் இணைத்து இதை சுற்றுலா மையமாக ஆக்குகின்ற திட்டத்திற்கு அரசு முன்னுரிமை கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை. வருகின்ற நிதியாண்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி.டி. தண்டபாணி.

[1996 ஆகஸ்ட் 21

திரு. சி.டி. தண்டபாணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழிபாட்டு ஸ்தலங்கள் இருக்கக்கூடிய இடங்களில் அரசு சுற்றுலா மையம் அமைப்பதற்கு மத்திய சர்க்காருடைய அனுமதி தேவையா? அப்படித் தேவை என்று சொன்னால் மத்திய சர்க்கார் வழிபாட்டு ஸ்தலங்களை சுற்றுலா மையமாக அமைப்பதற்கு ஏதாவது வழிகாட்டி முறைகள் - கைட்லைன்ஸ் — கொடுத்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லாத காரணத்தினால் தனிக் கேள்வி போட்டால் அதற்கான விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி அவர்களுடைய கேள்வி சுற்றுலா ஸ்தலங்களில் அங்குள்ள இந்தக் கோயில்களைக் காண வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்குத் தக்க வசதிகளைச் செய்ய கவர்ச்சிகரமான ஏற்பாடுகளைச் செய்ய மத்திய அரசிடம் அதிகாரம் உள்ளதா, மாநில அரசிடம் அதிகாரம் உள்ளதா என்பதே ஆகும். தமிழ்நாட்டிலே உள்ள பல ஆலயங்கள், வேறு சுற்றுலா மையங்கள் இவைகள் எல்லாம் தமிழ்நாட்டு அதிகாரத்திலேதான், இந்த அரசின் அதிகாரத்திலேதான் இருக்கின்றன. ஆனால் தொன்மை வாய்ந்த சின்னங்கள், தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், மாமல்லபுரத்தில் இருக்கின்ற அந்த ரதங்கள், அங்கே உள்ள கல்வெட்டுக்கள் இவை போன்ற பல மத்திய சர்க்காருடைய அதிகாரத்தின் கீழே வருகின்றன. எனவே, மத்திய சர்க்கார் அதிகாரத்தின் கீழும் தொன்மை வாய்ந்த சிற்பக் கூடங்களாக சிற்பக் கலைகள் நிரம்பிய கோயில்கள் இன்றைக்கு இருக்கின்றன. தமிழகத்திலே உள்ள பல கோயில்கள் மாநில அரசின் அதிகாரத்தின் கீழும் சுற்றுலாத் துறையிலே இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 202, திரு. எல். மூக்கையா, இருக்கையில் இல்லை. திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்.